
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்


புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 35 இதழ் - 3 மார்ச் - 2022

தனிப்பிரதி ரூ.10/-



சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்




















## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| நிறுவன ஆசிரியர் உரை | 3 |
| மதத்தின் பெயரால் ஜனங்கள் ... | 9 |
| பெண்கள் பகுதி | 13 |
| வாலிபர் பகுதி | 16 |
| சிறுவர் பகுதி | 19 |
| பிரிவினையில் தேவன் ... | 21 |
| யார் இந்த பேலியாளின் ... | 25 |
| இடறல்கள் | 28 |
| கிறிஸ்து என்னும் மார்க்கம் ... | 33 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN


**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 35 March - 2022 Issue - 3**


ஆசிரியர் உரை

## நாங்களோ சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்!

எல்லாச் சிறப்பையும் தன்னுள் தாங்கி, காலங்காலமாகச் செழித்து வாழ்ந்து, செம்மொழி என்ற சிறப்புத் தகுதியோடு செருக்கு நடைபோட்டு வரும் நம் தாய்மொழியாம் தமிழ் மொ ழியில், நானோ , நாங்களோ மற்றும் அவனோ , அவர் களோ'' போன்ற வார்த்தைகள் எல்லா நேரங்களிலும் பயன்படுத்தப்படும் வார்த்தைகளாக இல்லாமல், கவனமான பரிசீலனைக்குப் பிறகு பயன்படுத்தப்படும் வார்த்தைகளாக உள்ளன. ஆம், ஒரு நபரை வேறொரு நபருடைய குணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தோ அல்லது ஒரு கூட்டத்தை வேறொரு கூட்டத்தின் செயல்பாட்டோடு ஒப்பிட்டுப்பார்த்தோ அல்லது அமைப்பை வேறொரு அமைப்பின் திறனோடு ஒப்பிட்டுப் பார்த்தோ தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. அதாவது, ஒருவரிடமிருந்து வேறொருவர் சிறந்து விளங்கும் போது அல்லது ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று வேறுபட்டுத் திகழும்போது அல்லது ஒன்றிடமிருந்து மற்றொன்று உயர்ந்து நிற்கும் போது, அதை உன்னிப்பாகக் கவனிக்கும் சம்பந்தப் பட்டவர்களால் இவ்வார்த்தைகள் தாராளமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இச்சிறப்பு வார்த்தைகளில் ஒன்றாகிய நாங்களோ என்பதைத்தான், முதல் நூற்றாண்டில் மெய்க் கிறிஸ்தவத்தின் உபதேசத்தை உயிராகவும் மூச்சாகவும் கொண்டு, அன்றைய உலகமெல்லாம் சுமந்து திரிந்த, ஒப்பாரும் மிக்காருமற்ற கிறிஸ்துவின் ஊழியக்காரனான பவுலடியார், **நாங்களோ சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலாயும், கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்.** (1 கொரி 1:23) என்று கூறியுள்ளார். இவ்வார்த்தைகளைப்

பவுலடியார் பயன்படுத்தினார் என்று சொல்வதை விட, அப்படிப் பயன்படுத்த ஆவியானவர் அவரை ஏவினார் என்று சொல்வது தான் சரியாக இருக்கும். அப்படித்தானே!

சரி, இப்படிப் பயன்படுத்துவதற்கான அவசியம் பவுலடியாருக்கு ஏன் வந்தது என்பதைத் தெரிந்துகொள்ள, நமது வழக்கத்தின்படியாக, இதன் பின்னணிக்குள் இப்பொழுது நமது சிந்தையைச் செலுத்துவோம்.

பண்டைய கிரேக்கத்தின் முக்கியப் பட்டணமாகத் திகழ்ந்தது தான் கொரிந்து. அந்நாட்களில் இது ஓர் உலகளாவிய வியாபார கேந்திரம். இப்படிச் சொல்வது இப்பட்டணத்திற்குப் பெருமை சேர்ப்பதாக இருந்தாலும், இப்பட்டணத்தின் சிறுமைக்கான காரணங்களும் இல்லாமலில்லை. ஆம், கொரிந்து பட்டணம் விக்கிரக வணக்கத்தின் மையமாகவும், ஒழுக்கச் சீர்கேட்டின் இருப்பிடமாகவும் விளங்கியது. இப்படிப் பெருமையும், சிறுமையும் சேர்ந்திருந்த இப்பட்டணத்தில், பவுலடியார் தன்னுடைய இரண்டாம் நற்செய்திப் பயணத்தில் கால் பதித்து, கிறிஸ்துவின் நற்செய்தியை நறுக்குத் தெறித்தாற் போல் எடுத்துச் சொல்லி, கிறிஸ்துவின் சபையை ஏற்படுத்தினார் [அப். 18:1-17] இந்தச் சபையாருக்குப் பவுலடியார் ஆவியின் ஏவுதலால் இரண்டு நிருபங்களை, இரண்டு வித்தியாசமான காரணங்களுக்காக எழுதினார். அவற்றுள், இந்நிருபத்திற்கென்று இரண்டு நோக்கங்கள் அவருக்கு இருந்ததாக நாம் கூறமுடியும். 1. கொரிந்து சபையாரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு கூறுதல் 2. ஒழுக்கச் சீரழிவு நிறைந்த சதாயத்தின் மத்தியில் விசுவாசிகள் தங்களைக் காத்துக் கொள்ள உதவுதல். இந்நிருபத்தைப் பவுலடியார், தன்னுடைய மூன்றாம் நற்செய்திப் பயணத்தின் போது, எபேசுவில் தங்கியிருந்த காலத்தின் [அப். 19,9,10] இறுதி நாட்களில் எழுதியுள்ளார்.

இப்படி, கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபத்தின் தல் அதிகாரத்தை இரண்டு பகுதிகளாக நாம் பிரிக்கலாம். அதில், இரண்டாம் பகுதி, கிறிஸ்துவின் சிலுவை பற்றியும், அந்தச் சிலுவைக்கான வித்தியாசப்பட்ட பார்வை பற்றியும் பேசுகிறது [1:18-31]. இப்பகுதியினூடே வருவது தான் நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் வசனப்பகுதி. இவ்வசனத்தில் பவுலடியார், தானும், தன்னோடிருப்பவர்களும் சிலுவைக்காகக் கொண்டிருக்கும் பார்வைக்கும், மற்றவர்களுடைய பார்வைக்கும் வேறுபாடு உள்ளதென்பதைத்தான் **நாங்களோ** என்ற வார்த்தையின் மூலம் பளிச்சென வெளிப்படுத்தியுள்ளார். அதாவது, சிலுவைக்கான தங்களுடைய பார்வையைப் பிறருடைய பார்வையோடு ஒப்பிட் டுப் பேசியுள்ளார். அப்படியானால், யாரோடு இப்படி ஒப்பிட்டுப் பேசியுள்ளார்.

அவர்கள் வேறு யாருமல்ல, அவருடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவத்தின் எதிரிகளான யூதர்களும், அறிவுப் பித்தர்களான கிரேக்கர்களும் தான். இந்த யூதர்கள் மோசேயின் பிரமாணத்தின் படியான பக்தி வாழ்க்கையை நடத்தியவர்கள்.

ஆனால், மோசேயின் பிரமாணப் போதனைகளுக்கு மூமையாகச் செவி கொடுக்காமல், எதற்கெடுத்தாலும் அடையாளம் கேட்டு நச்சரித்தவர்கள் [மத். 12:38 ; 16:1 ; மாற்கு 8:11,2 ; 4:48] கிரேக்கர்களோ தத்துவார்த்த ரீதியிலான உலக ஞானத்தில் பைத்தியங் கொண்டு அலைந்தவர்கள். ஆனால், யூதர்களின் பக்தியோ, கிரேக்கர்களின் ஞானமோ கிறிஸ்துவின் சிலுவை பற்றிய சிறப்பையும். அதின் மேன்மையையும், அது தரும் நன்மைகளையும் உணர்ந்து கொள்ளுவதற்கும், அறிந்து கொள்வதற்கும் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. அப்படியானால், இவர்கள் கொண்டிருந்த பக்தியினாலும், பெற்றிருந்த அறிவினாலும் என்ன பயன்? ஒருவனுடைய பக்தியும், அறிவும் அவனுக்குச் சிலுவையின் மேன்மையை உணர்த்தி, பரலோகத்திற்கான பாதையைக் காட்டாவிட்டால், அவைகளை நேரிடையாகக் குப்பைத் தொட்டிக்கு அனுப்புவது தான் நல்லது. இதில் யாருக்கும் எந்தத் தயக்கம் தேவையில்லை.

இங்கே, தான் தேவனுக்குப் பிரியமாயிருப்பதற்கு தேவையானது எது என்பதை மெத்தப்படித்த பவுலடியார் நன்றாகவே அறிந்திருந்தார். ஆகவே தான், அதே முதலாம் நிருபத்தின் இரண்டாம் அதிகாரத்தில் இப்படியாக எழுதியுள்ளார். "…. இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருக்கிறேன் [1கொரி 2:2] என்று. ஏனெனில், மனுக்குலத்தின் அவசரத் தேவையாக கிறிஸ்துவின் சிலுவை தான் உள்ளது. அன்றைக்கும் இது தான் தேவை. இன்றைக்கும் இதுதான் தேவை. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பரியந்தம் இதுதான் தேவை.

ஆனால், நாம் வாழும் இந்நாட்களில் கிறிஸ்துவின் சிலுவைக்கு எப்படிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது? சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்து தான் எல்லாப் பிரசங்கிகளாலும், எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் பிரசங்கிக்கப்படுகிறாரா? சொல்லுங்கள். கிறிஸ்துவின் சிலுவையை இன்றைய கிறிஸ்தவம் முறை வைத்தல்லவா பிரசங்கிக்கிறது. அதாவது, வருடத்தின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான் கிறிஸ்துவின் சிலுவை நினைக்கப்பட வேண்டும் மற்ற சமயங்களில் அது நினைப்பதற்கும், பேசப்படுவதற்கும் லாயக்கற்றது என்பது போல. அதனால் தானே, வருடத்தின் சில மாதங்களில் பெத்லகேமில் பிறந்த இயேசு பற்றிய சத்தம் கேட்கும். பிறமாதங்களில் அற்புதங்களைச் செய்த இயேசு

மற்றும் ஆசீர்வாதங்களை வாரி வழங்கும் இயேசு பற்றிய வர்ணனை வலம் வரும். பிறகு வருடத்தின், இந்த மாதங்களில், பெத்தலையில் பிறந்து, நாசரேத்தில் வளர்ந்த இயேசுவும், நன்மை செய்கிறவராகச் சுற்றிந்திரிந்து, அற்புதங்கள் செய்த இயேசுவும் லாவகமாக ஒதுக்கப்பட்டு, கொல்கொதா மலையை நோக்கி ஓட்டம் நடக்கும். இதுதானே நடந்து கொண்டிருக்கிறது!.

இங்கே நான் ஒன்றைக் கேட்கிறேன். பேதுரு, பவுல் போன்ற தேவ மனிதர்கள் தங்கள் பிரசங்கங்களில் எங்காவது பெத்தலையில் பிறந்த இயேசு பற்றியோ, அற்புதங்கள் செய்த இயேசு பற்றியோ அதிக க்கியத்துவம் கொடுத்துப் பேசியிருக்கிறார்களா? இப்படிச் சொல்வதால் இயேசுவின் பிறப்பையும், அவருடைய அற்புத வல்லமையையும் நான் குறைத்து மதிப்பிடுகிறேன் என்று யாரும் தவறாக எண்ணி விட வேண்டாம். ஆனால், அப்போஸ்தலர்கள் ஏன் அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசவில்லை என்று தான் கேட்கிறேன்? அவர்கள் இயேசுவின் பிறப்புக்கும், அற்புதச் செயலுக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசங்கிப்பதை தேவன் தமது ஆவியானவர் மூலமாக ஏன் அனுமதிக்கவில்லை என்று தான் கேட்கிறேன்? எது முக்கியம் என்று நமக்குத் தெரிந்த அளவு ஒருவேளை ஆவியானவருக்குத் தெரியாமல் இருந்திருக்குமோ?

அருமையானவர்களே, எல்லாக் காலங்களிலும் வாழ்ந்த, வாழ்கின்ற மனுக்குலத்துக்கான அவசிய, அவசரத் தேவை, பாவத்தினால் தேவனிடம் இருந்து பிரிந்து போன மனிதன் மீண்டும் தேவனிடம் சேர்வதே. அப்படிச் சேர்க்கப்படுவதற்கு அவனுக்குத் தேவை, பாவமன்னிப்பு – இரட்சிப்பு. இந்த இரட்சிப்புக்கு ஒருவனை வழிநடத்தும் வல்லமை கிறிஸ்துவின் சிலுவைக்கும், சிலுவையின் உபதேசத்துக்கும் மட்டுமே உண்டு. இயேசுவின் பிறப்பு ஒருவனை இரட்சிப்புக்கு வழிநடத்துவதை விட, இயேசுவின் அற்புதம் ஒருவனை இரட்சிப்புக்கு வழி நடத்துவதைவிட, இயேசுவின் சிலுவை ஒருவனை சிறப்பாக வழி நடத்தும் என்ப தில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது, இரட்சிப்பை சுவிசேஷம் அருளுகிறபடியால் தான், கிறிஸ்துவின் நற்செய்தியை இரட்சிப்பின் சுவிசேஷம் என்கிறோம் (எபேசி. 1:13).

இயேசுவானர், தமது பிரதான கட்டளையில், .... உலக மெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கி யுங்கள் என்றார் (மாற். 16:15). இங்கே சுவிசேஷம் என்ற வார்த் தைக்கான பொருள் என்ன தெரியுமா?. இதற்கான விளக்கம் 1கொரி. 15:1–4 வசனங்களில் உள்ளது. அதாவது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய இம் மூன்றும் தான் சுவிசேஷம் என்று இவ்வசனங்கள் தெளிவாகச் சொல்லுகிறது. இரட்சிப்பை அருளும் சுவிசேஷத்தில், கிறிஸ்துவின் பிறப்பும், அற்புதங்களும்

அடங்கவில்லை என்பது இப்பொழுது உங்களுக்குப் புரிகிறதா? இல்லையா? ஆகவேதான், அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சிலுவையைச் செல்லுமிடமெங்கும் எடுத்துச் சென்று அதை அப்படியே தூக்கிப் பிடித்தனர். அப்போஸ்தலர்கள் ஒருபோதும் கிறிஸ்துவை முறை வைத்துப் பிரசங்கிக்கவில்லை. மாறாக, எங்கும், எல்லாச் சமயத்திலும் கிறிஸ்துவின் சிலுவையை முக்கியப்படுத்தியே பிரசங்கித்தனர்.

சரி, இப்படி ஆவியானவர் பார்வையிலும், அப்போஸ்தலர்கள் பார்வையிலும் முக்கிய இடம் பெற்று, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மனுக்குலத்துக்குத் தொடர்ந்து இரட்சிப்பை நல்கி வரும் கிறிஸ்துவின் சிலுவை நமக்கு எடுத்துச் சொல்லும் வேறு சில பாடங்கள் என்ன என்று கீழே பார்ப்போம்.

1 **கிறிஸ்துவின் சிலுவையும், தேவ ஞானமும்.**

கிறிஸ்துவின் சிலுவை நமக்குக் கற்றுக் கொடுக்கும் அநேக பாடங்களுள் முதல் பாடம், பரலோக தேவனுடைய ஞானம் பற்றியது.

சர்வ வல்ல தேவனுடைய ஞானம் பற்றி முழுமையாக எடுத் துக் கூற எந்த ஒரு மனிதனும் தகுதியானவனல்ல என்பது சர்ச் சைக்கிடமற்ற தீர்மானமான கருத்து. ஏனெனில், மனிதனுடைய மிஞ்சின ஞானம் தேவனுக்கு முன்பாகப் பயித்தியமாயிருக்கிறது (1கொரி. 1:20). ஒருவேளை நமக்கு வேண்டுமானால் சாலமோன் ராஜாவின் ஞானம் எவரெஸ்ட் சிகரம் போன்று உயர்ந்து விளங் கலாம். ஆனால், தேவனுக்கோ அது ஒரு மாபெரும் பள்ளத்தாக்கு.

ஒருவேளை, உண்மை நிலை இப்படியாக இருந்தாலும், ஆவியானவர் தேவ ஞானம் பற்றி நாம் கொஞ்சமாகிலும் விளங்கிக் கொள்ளும்படியான சில கருத்துக்களை வேதாகமத்தின் பக்கங்களில் வெளிப்படுத்தியே கொடுத்துள்ளார். யோபு புத்தகத்தில் அவர் பூரண ஞானள்ளவர் என்று தெரிந்து கொள்ள முடியும் (யோபு 37:16). ஏசாயா தீர்க்கனை கொண்டு ஆவியானவர், பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது? (ஏசாயா 40:28) என்று வெளிப்படுத்தியுள்ளார்.

இப்படிப் பூரணமும், ஆராய்ந்து முடியாததுமான தேவ ஞானத்தை வெளிப்படுத்தும் வழிகளில் ஒன்றாக கிறிஸ்துவின் சிலுவை உள்ளது. எப்படியெனில், 1கொரி 2:20-ல் இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட **அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத்**

**தீர்மானித்திருந்தேன்** என்று சொல்லும் பவுலடியார் தொடர்ந்து கூறும்போது, அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம் ; இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலக தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம் என்று கூறுகிறார் (1கொரி 2:2-7). இப்பகுதியானது தேவ ஞானத்திற்கும் கிறிஸ்துவின் சிலுவைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குமான பந்தத்தை நமக்கு எடுத்து விளக்குகிறது.

இன்னும் இதே பவுலடியார், எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, தேவ ஞானத்தோடு கிறிஸ்துவின் சபையைத் தொடர்புபடுத்துவதையும் நாம் காணலாம். .... உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாக இப்பொழுது தெரியவரும் பொருட்டாக... என்று (எபே 3:10). ஆக, சிலுவையின் மூலம் நாம் தேவ ஞானத்தையும், சிலுவைக் கிறிஸ்து கட்டின ஒன்றான மெய்ச் சபையின் மூலம் நாம் தேவ ஞானத்தையும் அறிந்து கொள்ளுகிறோம்.

ஆக, தேவ ஞானம் நமக்கு வெளிப்படுத்தியிருக்கும் சிலுவையையும், சிலுவைக் கிறிஸ்து கட்டின சபையையும் நாம் அற்பமாக எண்ணாமல், சிலுவையின் உபதேசத்துக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, சிலுவைக் கிறிஸ்துவின் சபையில் நாம் அங்கமாக மாறுவோம்.

## II **கிறிஸ்துவின் சிலுவையும், தேவ வல்லமையும்**

கிறிஸ்துவின் சிலுவையிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற அடுத்த பாடம், பரலோக தேவனுடைய வல்லமை பற்றியது.

தேவனுடைய வல்லமை இந்த இடத்திலே தான் இருக்கிறதென்று நாம் சொல்ல முடியாதபடி, அது விண்ணிலும், மண்ணி லும் நீக்கமற நிறைந்து கிடக்கிறது. இந்த உண்மையைத்தான் தாவீது தனது சங்கீதங்களுள் ஒன்றில், வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங். 19:1) என்று எழுதி அவருடைய வல்லமையைப் பிரபலப்படுத்துகிறார். எரேமியா தீர்க்கன் இன்னும் சிறப்பாக, அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தை தமது ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார் (எரே 51:15) என்று கூறியுள்ளார். ஆம், தேவனுடைய வல்லமையை நாம் ஏதேன்

தோட்டம் தொடங்கி, கிறிஸ்துவின் பிறப்பு (லூக் 1:35), கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (2கொரி 13:4), சபை ஸ்தாபிதம் (அப். 2). வருகை பற்றிய விவரிப்பு (1தெச 4:15–17) என்று எங்கும் காணலாம். அதை விட, பரலோக மகிமை பற்றிய வர்ணணை தேவ வல்லமைக்கு எல்லையே இல்லை என்பதை நமக்கு உணர்த்துகிறது. இப்படிப்பட்ட தேவ வல்லமை கிறிஸ்துவின் சிலுவையிலும் நமக்குத் தெரியாமலில்லை .

பவுலடியார் கொரிந்தியர் முதலாம் நிருபத்தின் முதல் அதிகாரம்18–ம் வசனத்தில், சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப் படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது என்று கூறுகிறார். தேவ பெலன் என்பதும், தேவ வல்லமை என்பதும் ஒன்று தான். சிலுவையின் மூலம் நாம் பெற்றிருக்கிறது உபதேசமாகிய சுவிசேஷம் தேவ வல்லமையை நமக்கு வெளிப்படுத்துகிறது. மேலும், பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதும் போது, கிறிஸ்துவின் சிலுவையை மூலாதாரமாகக் கொண்டு பெற்ற சுவிசேஷத்தை இப்படியாகக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. தேவ வல்லமையாயிருக்கிறது என்று. (ரோமர் 1:16) கிறிஸ்துவின் சிலுவையானது மனுக்குலத்துக்கு தேவ வல்லமையை இப்படியாக வெளிப்படுத்தியிருக்கிறது.

அருமையானவர்களே, தேவனுடைய வல்லமையினாலே சிலுவையின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிற சுவிசேஷத்தை நாம் நம்முடைய வாழ்க்கையில் எந்த இடத்தில் வைத்துள்ளோம்? சிலுவையின் சுவிசேஷம் போதிக்கும் இரட்சிப்பை (1 கொரி 1:18) நாம் நம்முடைய வாழ்க்கையில் பெற்று விட்டோமா? சிந்திப்போம். சிலுவையின் சுவிசேஷம் தரும் இரட்சிப்பை, புதிய ஏற்பாடு சொல்லும் உபதேசத்தின்படி நாம் பெறாமல், சிலுவைக்கு என்னதான் முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். அதைக் கையிலும், கழுத்திலும், சுவற்றிலும் தொங்கவிட்டுக் கொண்டு, எப்படித்தான் சிலுவை பற்றி முறை வைத்துப்பாடிப் பிரசங்கித்தாலும் நாம் சிலுவைக்குப் பகைஞராகவே தேவனால் பார்க்கப்படுவோம் (பிலி. 3:18) என்பதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம்.

ஆகையால், நாம் சிலுவைக்கும், சிலுவை நமக்கு வெளிப் படுத்தும் தேவ வல்லமைக்கும் எதிரானவர்களாகக் காணப்படாமல், சிலுவையின் உபதேசத்துக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, சிலுவை கிறிஸ்துவுக்காக நம்மை ஒப்புக்கொடுத்து வாழ பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக.

III **கிறிஸ்துவின் சிலுவையும், இரத்தத்தின் வல்லமையும்.**

கிறிஸ்துவின் சிலுவையிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தின் வல்லமை பற்றியது.

விஞ்ஞானத்தின் அளப்பரிய சாதனைகள் விண்ணை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் இந்தக் காலத்திலும் ஓர் உண் மையை நாம் ஓங்கி அடித்துச் சொல்ல முடியும். அது, இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்திற்கு நிகரான வல்லமை வேறு எதற்கும் இல்லையென்று. பரிசுத்த ஆவியானவர், இப்பேருண்மையை யோவான் அப்போஸ்தலனுக்கு அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளார். ......அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் **இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்** என்று (1யோவா 1:7). கிறிஸ்துவின் இரத்தத்திற்கான இந்த வல்லமை வேறு எதற்கு உண்டு ? அப்படி வேறு எதற்காகிலும் இருந்திருக்குமானால் பிதாவாகிய தேவன் தமது ஒரே பேறான குமாரனை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை.

நம்டைய பாவங்கள் கழுவப்படும்படியாய் கிறிஸ்து சிலு வையில் சிந்தின இரத்தத்தின் சிறப்பு குறித்து பரிசுத்த ஆவியானவர் எப்படியெல்லாம் எடுத்துக் கூறுகிறார் என்று பாருங்கள். அது குற்றமில்லாதது (மத். 27:4) மாசற்றது மற்றும் விலையேறப்பெற்றது (1பேது 1:19). சுத்திகரிப்பதற்குப் போதுமானது (எபி 9:14). இறுதி யானது (எபி. 9:26) மற்றும் வெற்றி கொள்ளக் கூடியது (வெளி. 12:11).

இன்னும், இந்த இரத்தத்தின் மேன்மையை ஆவியானவரின் ஏவுதலால் பவுலடியார் கொலோசெ பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எடுத்துச் சொல்லும் நேர்த்தியைக் கொஞ்சம் பாருங்களே. அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கி கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று (கொலோ 1:16) என்று.

ஆம், பாவத்தின் பயங்கரத்தினாலே தேவனிடமிருந்து பிரிந்து போன (ஏசாயா 59:1,2) மனிதனைப் பாவத்திலிருந்து கழுவி மறுபடியும் தேவனோடு ஒப்புரவாக்கும் செயலைச் செய்யும் வல்லமை கிறிஸ்துவின் இரத்தத்திற்கு மாத்திரமே உண்டு.

அந்த இரத்தமானது, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வலி, வேதனைகளுக்கு மத்தியில் சிலுவையில் சிந்தப்பட்டது. இப்படி சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தம் தான் மனிதனுக்கு தேவனோடிருந்த பகையைக் கொன்று (எபே 2:16) அவனுக்குச் சமாதானத்தைப் பெற்றுத் தந்தது. அப்படியானால், அன்பானவர்களே, நாம் ஒவ்வொருவரும் தேவனோடு சமாதானமாகி விட்டோமா? இயேசுவானவர் பாடுகளையும், அவமானத்தையும் சகித்துக் கொண்டு சிலுவையில் இரத்தம் சிந்தினதற்கான நோக்கம் நாம் தேவனோடு சமாதானமாக வேண்டுமென்பது தான். மற்றபடி, வருடத்தின் சில மாதங்களில் நாம் அவரை நினைத்து, அவருடைய பாடுகளைப் பெரிதாகப் பேச வேண்டுமென்பதற்காக அல்ல. அவருடைய பாடுகளை நினைக்கும் வாய்ப்பு தேவனுடைய பிள்ளைகளுக்குக் கர்த்தரின் பந்தியின்போது வாரந்தோறும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (1கொரி. 11:23-24)

தேவனோடு சமாதானமாவதற்கு நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அது எப்படி என்கிறீர்களா? கொஞ்சம் கவனமாகக் கவனியுங்கள். மத் 26:28-ம் வசனம் இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம் என்று கூறுகிறது. அப். 2:38;22:16 ஆகிய வசனங்கள், ஞானஸ்நானத்தினாலே பாவ மன்னிப்பு என்று கூறுகிறது. அப்படியானால், ஒருவன் சிலுவையின் உபதேசப்படி ஞானஸ்நானம் பெறும் போது, கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்துகிறான் என்பது தெளிவாகிறது. அந்த இரத்தம் தான் ஒருவனுடைய பாவங்களைக் கழுவுகிறது. கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு நாம் முழுமையாகக் கீழ்ப்படியாமல், அதாவது, விசுவாசித்து (மாற் 11:16), மனந்திரும்பி (அப். 2: 38). இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (ரோம 10:9,10), பிறகு பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறாவிட்டால் (அப். 22:16) நாம் எத்தனை முறை தண்ணீரில் முழுகி எழுந்திருந்தாலும் அதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. நாம் இன்னும் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளாதவர்களாகவே இருப்போம். இதில் குழப்பம் வேண்டாம். கிறிஸ்துவின் உபதேசம் இப்படித்தான் சொல்லுகிறது.

ஆகையால், அருமையானவர்களே, இங்கே கிறிஸ்துவின் சிலுவை நமக்குக் கற்றுக்கொடுக்கும் இந்தப் பாடங்களை நாம் அப்படியே மனதில் ஏற்று, வருடத்தின் ஒரு சீசனுக்கு மாத்திரம் சிலுவைக் கிறிஸ்துவை நினைக்கிறவர்களாக இல்லாமல், எப்பொழுதும் கிறிஸ்துவை நினைத்து, கிறிஸ்துவுக்கும், அவருடைய சிலுவை போதனைகளுக்கும் உண்மையுள்ளவர்களாக நடந்து, கிறிஸ்து கட்டின ஒன்றான மெய்ச் சபையில் அங்கமாகி, பரலோக பாக்கியத்தை உறுதி செய்து கொள்வோம். ஆமென்! ✝

# பிசாசுகளைத் துரத்துதல்

Bro. J.C. **சோட்**

**ச**மீப காலமாக சாத்தானை ஆராதிப்பவர்கள் பற்றி ஒரு புறத்திலும், பிசாசுகளைத் துரத்துகிறவர்கள் பற்றி மறுபுறத்திலும், அதிகமாகக் கேள்விப்படுகிறோம். பேய் ஓட்டுதலைப் பற்றி எழு தப்பட்ட ஒரு புத்தகம் அதிகமாக விற்பனையான புத்தகங்களுள் ஒன் றாகத் திகழ்கிறது. பேய் ஓட்டுதலைப் பற்றி ஒரு திரைப்படம் எடுக்கப் பட்டு அதுவும் அதிகமாகப் பிரபலமானது. இவைகளெல்லாம், பிசாசைப் பற்றியும், பிசாசு மனிதனோடு இடைபடுகிற விதத்தைப் பற்றியும் பல கேள்விகளை எழுப்புகின்றன. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாட்களிலும், அப்போஸ்தலர்களின் நாட்களிலும், பிசாசுகள் மனிதர்களுக்குள்ளாகப் புகுந்து அவர்கள் மேல் ஆதிக்கம் செலுத் தியது. கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும், அந்த அசுத்த ஆவிகளைத் துரத்தியிருக்கிறார்கள். ஆனால், இந்நாட்களில் எப்படி? இன்று ஜனங்களுக்குள்ளாக பிசாசு புகுகின்றதா? அப்படிப் புகுந்தால் அதை விரட்ட முடியுமா? யாரால் பிசாசுகளைத் துரத்த முடியும்?

வேதாகமத்தில் நாம் பார்க்கும் போது, சாத்தானுடைய ஆரம்பம், அவன் எப்படிக் கிரியை செய்கிறான் என்பது பற்றியெல்லாம் வேதாகம அவ்வளவாகத் தகவல்களைத் தரவில்லையென்றாலும், ஆங்காங்கே அவனைப் பற்றி பதிவு செய்யப்பட்டிருக்கும் தகவல் களைத் தான் நாம் சார்ந்திருக்க வேண்டியதாயிருக்கிறது. தேவன், வானத்திலும் பூமியிலும் உள்ள சகலவற்றையும் உண்டாக்கினார் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால், சாத்தானை தேவன் தான் உண்டாக்கினார் என்ற முடிவுக்கு தாராளமாக நாம் வர முடியும். ஆரம்பத்தில் சாத்தான் தீமையானவனாகக் காணப்பட வில்லை. ஆனால், அவன் தேவனுக்கு விரோதமாகவும், உண்மை யுள்ள தூதர்களுக்கு விரோதமாகவும் கலகம் செய்த படியால், அவனும் அவனுக்கு ஆதரவாயிருந்தவர்களும் பரலோகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டார்கள். தேவனால், மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட வுடனேயே சாத்தான், சமயத்தை வீணடிக்காமல் ஏதேன் தோட்டத் தில் ஆதித்தாயாகிய ஏவாளின் மூலம் ஆதாமையும் வஞ்சித்து வெற்றி கொண்டான். அதினிமித்தம் பாவம் உலகத்தில் பிரவே சித்தது. அதிலிருந்து தான் சாத்தான் இருப்பதை மனித குலம் உணர்ந்து கொண்டது.

வேதாகமத்தில், சாத்தான் பெயர் செபூல், பிசாசு, சர்ப்பம், பொல் லாதவன், பொல்லாத ஆவி, அசுத்த ஆவி என்னும் பதங்களில் அழைக்கப்படுகிறான். அவன் ஆவியாயிருக்கிறான். வேதாகமத்தின் பல இடங்களில் பன்மையில் பேசப்பட்டிருக்கிறான். மாற்கு 5:1–13

வசனங்களில் இயேசு கிறிஸ்து கல்லறைகளில் வாழ்ந்து கொண்டிருந்த அசுத்த ஆவியுள்ளள ஒரு மனுஷனை எதிர் கொண்டு அவனைப் பார்த்து உன் பெயர் என்னவென்று கேட்ட போது நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பெயர் லேகியோன் என்றான். யாக்கோபு நிருபத்தில் நாம் பார்க்கும் போது அதன் ஆசிரியர், கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது ; ஏனென்றால் பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன [யாக்.2:19] என்கிறார். இதினிமித்தம். சாத்தானும், அவனுடைய தூதர்களும் அநேகராயிருக்கிற படியால், பிசாசு பிடித்தவன் அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆகவேதான் சாத்தான், பிசாசுகள் என்னும் பன்மையில் அழைக்கப்படுகிறான்.

கிறிஸ்துவின் நாட்களிலும், அப்போஸ்தலர்களின் நாட்களிலும், பிசாசு சிலபல விசேஷித்த வல்லமைகளையும், சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்ள தேவன் அனுமதி கொடுத்தது போல் தெரிகிறது. எப்படியென்றால், சாத்தான் மனிதர்களுக்குள்ளாகப் புகுந்து அவர்களைக் கட்டுப்படுத்த தேவன் அனுமதித்திருக்கிறார். இத்தகைய சூழலில் பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள், அந்த அசுத்த ஆவிகளுக்கு எதிராக எதையும் செய்ய முடியாதிருந்தது. பிசாசுகள் மனிதர்களுக்குள் குடியிருந்து, அவர்கள் மூலமாகப் பேசி, அவர்களை அலைக்கழித்தன. ஆனால், இதன் நோக்கம் என்னவாக இருந்தது? பிசாசுகளுக்கு இத்தகைய விசேஷித்த வல்லமையையும், சுதந்திரத்தையும் தேவன் கொடுத்ததற்கான காரணம், கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் பிசாசுகளைத் துரத்தி சாத்தானை விட தேவன் தான் பெரியவர் என்பதை உலகம் உணர்ந்து கொள்ளத்தான். மேலும் இது, கிறிஸ்து மூலமாகவும், அப்போஸ்தலர் மூலமாகவும் தேவன் கிரியை செய்கிறார் என்பதையும் நிரூபணம் செய்தது. எனவே, இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, சாத்தானுக்கு ஒரு வகையான வல்லமை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சில குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கொடுக்கப்பட்டது என்பது உறுதியாகத் தெரிகிறது.

மனிதனை மேற்கொண்டு, அவனுக்குள்ளாகப் புகுந்து செயல்படும் அதிகாரம் அந்நாட்களில் இருந்துள்ளது. இதற்கு மிகச்சிறந்த உதாரணம் மாற்கு 5:1–13 வசனப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.மற்றுமொரு உதாரணத்தை மத்தேயு 9:32 –ல் பிசாசு பிடித்த ஊமையான ஒரு மனுஷனுடைய வாழ்க்கையில் நாம் காண முடியும். மேலும், இயேசுவும் அப்போஸ்தலர்களும் கிராமங்கள் தோறும் போய் நற்செய்தியை அறிவித்தார்கள். பின்பு அவர் பட்டணங்கள் தோறும் பிரயாணம் பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார். பன்னிருவரும் அவருடனே கூட இருந்தார்கள் [லூக்கா 8:1]. பிலிப்பு சுவிசேஷத்தை பிரசங்கிக்க சமாரியாவுக்குச் சென்றபோது பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு

அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள் ( அப்.8: 6,7). இங்கே நாம் கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், அசுத்த ஆவிகளைத் துரத்தும் வல்லமையை கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் மாத்திரம் பெற்றிருக்கவில்லை. மாறாக, அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததினால், அற்புத அடையாளங்களை செய்யும் வல்லமை பெற்ற பிலிப்பு போன்றோரும் பிசாசுகளைத் துரத்தியிருக்கிறார்கள். பிசாசு பிடித்திருந்த பலரை நம் ஆண்டவரும், அவருடைய சீஷர்களும் சுகப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால், யாருக்கும் பிசாசு பிடிக்கவில்லை என்று பல்வேறுபட்ட விளக்கங்கள், வியாக்கியானங்கள் உண்டு. இன்னும் சிலர், தங்களுக்குப் பிசாசு பிடித்திருந்ததாக நினைத்தவர்கள், பாவம் நிறைந்த தூதர்களால் வழிநடத்தப்பட்டவர்கள் என்றும் கூறுகிறார்கள். இந்த விளக்கங்கள் ஒன்றும் வேத வசனத்தோடு ஒத்துப் போகவில்லை என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். யூதா 6, தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். I பேதுரு 2:4, பாவஞ் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னும் சிலர், அந்தப் பிசாசுகள் துன்மார்க்கமாக மரித்தவர்களுடைய ஆவிகள் என்று நினைக்கின்றனர். ஆனால், அந்த ஐசுவரியவான் ஆபிரகாமிடம் தனக்கு ஐந்து சகோதரர் உண்டென்று அவர்கள் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி லாசரு போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும் படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான். அதற்கு ஆபிரகாம், அவர்கள் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்தபடியால் அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும், அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளவு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்.

தொடரும் ....

பெண்கள் பகுதி

# நம் குடும்பத்தில் இயேசு

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது சில குடும்பங்களுக்கு விருந்தாளியாகச் சென்றார்.

1. சீமோன் பேதுரு, அந்திரேயா வீடு (மாற்கு. 1:29–31)
2. யவீருவின் வீடு (மாற்கு. 5:22–41)
3. பெத்தானியாவின் மார்த்தாள், மரியாள் வீடு (லூக்கா. 10:38–43)
4. சகேயுவின் வீடு (லூக்கா . 19:1–10).

மேற்கண்ட நான்கு குடும்பங்களும் மாற்குவில் இருந்து இரண்டும், லூக்காவிலிருந்து இரண்டுமாக பல நல்ல கருத்துக் களால் பின்னிப் பிணைந்து உள்ளது. இந்த நான்கு குடும்பங்களில் இரண்டு குடும்பங்கள் பாலஸ்தீனாவின் வடக்கில் உள்ள கலிலே யாவிலும், மற்ற இரண்டும், தெற்குமுனையில் உள்ள யூதேயாவிலும் அமைந்திருந்தது. ஒவ்வொரு குடும்பத்திலும் இவர் வரவழைக் கப்பட்டார். கலிலேயாவின் வடமேற்கு எல்லையில் கரையோரத்தில் அமைந்திருந்த தங்கள் ஏழ்மையான வீட்டிற்கு, தங்கள் அன்பான எஜமானின் வருகையை எண்ணி சீமோன் பேருதுவும், அந்தி ரேயாவும் மகிழ்ச்சியில் திளைத்துப் போயிருந்தனர். மரிக்கும் தருவாயில் இருக்கும் தன் மகளை குணமாக்கும்படி யவீரு இயேசுவை வருந்திக் கேட்டுக்கொண்டான். பெத்தானியாவில் உள்ள மார்த்தாள், மரியாள் வீட்டில் இயேசுவுக்கு எப்போதுமே மனமார்ந்த வரவேற்பு கிடைத்தது. ஆயக்காரருக்குத் தலை வனாயிருந்தவன் வீட்டிற்குத் தானாக சென்று தங்க வேண்டும் என்று இயேசு எண்ணினார்.

இயேசு கிறிஸ்துவுக்கு சகேயுவிடமிருந்து பெரிதாக ஒன்றும் உயர்ந்த வரவேற்பு கிடைத்தது என்று நாம் கூறிவிட முடியாது. இயேசு தாமாக இந்த வீடுகளுக்கு அழையா விருந்தாளியாகச் செல்லவில்லை. அழைத்தவர்களும் உள்ளே வெறுப்பை வைத்துக் கொண்டு வெளியே உபசரிப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்துடன் அவரை உபசரிக்கவில்லை. தங்களுடைய ஏழ்மையான வீடுகளில், தேவகுமாரனைத் தெய்வீக விருந்தாளியாக ஏற்றுக்கொண்ட விஷயத்தில், எண்ணத்திலும், செயலிலும் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டினார்கள். தம்மை விரும்பாத, வரவேற்காத வீடுகளுக்குச் சென்று இயேசு கிறிஸ்து நீண்ட நேரம் தங்கினதே இல்லை. லூக்கா 4ம் அதிகாரத்தின்படி அவர் நாசரேத்திலிருந்து வெளியேறினது. மாற்கு 5ம் அதிகாரத்தில் உலக ஆசைபிடித்த கதரேனரிடமிருந்து வெளியே வந்தது ஆகிய இரண்டும் இதற்கு

தக்க சான்றுகள் ஆகும். வெளிப்படுத்தல் 3:14–22 ஆகிய வசனப்பகுதிகளில் பார்த்தால், இயேசு கிறிஸ்து தன்னுடைய சொந்த சபையிலே உள்ளவர் கூட குளிருமின்றி, அனலுமின்றி வெது வெதுப்பாயிருக்கிறபடியால் அவர்களை வாந்தி பண்ணிப் போடு வேன் என்கிறார். முடிவாக, இங்கே நாம் கவனிக்க வேண்டியது, இயேசுவை நாம் அழைத்தாலேயொழிய அவர் வந்து நம் வீட்டில் வாசம் பண்ணமாட்டார்.

மேலே கண்ட வீடுகளில் உண்மையாகவே தேவைகள் இருந்தது. பேதுரு, அந்திரேயா வீட்டில் பயங்கரமான சுகவீனம் இருந்தது. மாற்கு ஆசிரியர் சொல்லும் போது, பேதுருவின் மாமி ஜுரமாயிருந்தாள் (மாற்கு. 1:30) என்கிறார். லூக்கா ஆசிரியர் ஒரு வைத்தியனாக இருந்து கொண்டு அதை கடும் ஜுரம் (லூக்கா 4:38) என்கிறார். அதே வசனத்தில் அவளுக்காக அவரை வேண்டிக் கொண்டார்கள் என்று வாசிக்கிறோம். இந்த மாதிரி கரிசனை அவர்களுக்கிடையே இருந்த அன்பு, பாசப் பிணைப்பு, இரக்கம், ஈவு இவைகளை வெளிப்படுத்துகிறது. இதைத்தான் இன்று நாம் எதிர் பார்க்கிறோம். இயேசுவைதங்கள் வீட்டிற்கு அழைக்கும் குடும்ப ங்கள் பொதுவாகவே பல தகுதியான குணங்களைப் பெற்றிருக்கும். இரண்டாவது வீடான யவீருவின் வீட்டில், சுகவீனம் மரணத்தை ஏற்படுத்தியது. உண்மையாகவே யவீருவின் வீட்டில் ஒரு தேவை இருந்தது. அதைப் போலவே, ஜீவனுள்ள வார்த்தைகள் பேசப்பட்டு, நிரூபிக்கப்பட வேண்டிய அவசியம் பெத்தானியாவின் குடும்பத்தில் இருந்தது. தேவ சித்தத்தை நிறைவேற்றின தேயல்லாமல் வேறு வேலையை அவர் செய்யவில்லை . மத். 7:37–ல் எல்லாவற்றையும் நன்றாச் செய்தார் என்று அவர் புகழப்படுகிறார். எல்லாத் தேவை களைக் காட்டிலும் சகேயுவின் வீட்டில் இரட்சிப்பின் தேவை இருந்தது. அநியாயமாக வாங்கினதைத் திரும்பச் செலுத்தினான். இங்கே நான்கு வீடுகள், ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தேவையில் இருந்தது.

இயேசு கிறிஸ்து ஆசீர்வாதத்தை சுமந்து கொண்டு நம்மடைய வீடுகளுக்கு வர இருக்கிறார். தெய்வீக விருந்தாளியான அவர் வெறுங்கையோடு வருவதில்லை. இந்த உலகமே கொள்ளாத அளவு ஐசுவரிய களஞ்சியம் அவருக்கே சொந்தமானது. ஒவ்வொரு வீட்டிற்கும் அவர் ஓர் ஆசீர்வாதமாக மட்டும் வர வில்லை. யார் யாருக்கு எந்த ஆசீர்வாதம் மிகத் தேவையோ அதைக் கொண்டு வருகிறார். சீமோன் வீட்டிற்கு அவர் மா மருத்துவராக, வந்தார். அவருடைய வருகையால் அக்குடும்பத் தில் அதிகம் நேசிக்கப்பட்ட அம்மாளுடைய சுக வீனம் நீங்கினதோடல்லாமல், மற்றவர்களும் ஆறுதல் அடைந்தார்கள். யவீருவின் வீட்டிற்கு உயிர்த் தெழுதலையும், ஜீவனையும் கொடுக்கிறவராக வந்தார். தன் ஒரே மகள் மரித்துப் போனபோது, இயேசுவானவர் அவளோடிருந்தது எவ்வளவு பாக்கியமான நிலையென்று பாருங்கள். நீங்களும், நானும்

பல முறை இம்மாதிரி சம்பவங்களில் என்ன செய்வது, சொல்வது என்று அறியாமல் இருக்கிறோம். ஆனால் மனிதனை சிருஷ்டித்த அவர் நம்முடைய தேவைகளைச் சரியாகத் தெரிந்து வைத்திருக்கிறார். இரண்டு வார்த்தைகளை அவர் உதிர்க்கிறார். **பயப்படாதே, விசுவாசள்ள வனாயிரு** (மாற்கு. 5:36). மனிதர்கள், கதை கதையாக வார்த்தைகளால் பேசலாம். ஆனால், இயேசு கிறிஸ்து இரண்டே வார்த்தைகளில் ஆறுதல்படுத்துகிறார்.

மரியாளின் வீட்டில் இருந்து தம்முடைய அற்புதமான ஜீவனுள்ள வசனங்களைப் போதித்துக் கொண்டிருந்தார். அதனுடைய மதிப்பு அவளுக்குத் தெரிந்திருந்தது. ஞானி சாலமோன் கூறும்போது, ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட வார்த்தை வெள்ளித் தட்டில் வைத்த பொற் பழங்களுக்குச் சமானம் (நீதி. 25:1) என்கிறார். யாராவது ஒருவர் ஏற்ற வார்த்தைகளைப் பேசியிருப்பாரானால், அது தேவனுடைய குமாரனாகத்தான் இருக்க முடியும். ஏக்கத்தோடு இருந்த மரியாளின் இருதயத்திற்கேற்ற வார்த்தைகளை இயேசு மொழிந்தருளினார். முதலாம் நூற்றாண்டிலே எப்படி சகேயுவின் வீட்டிற்கு இரட்சிப்பைக் கொடுத்த இரட்சகராயிருந்தாரோ, அதே இரட்சகர் இன்றும் நம் வீட்டிற்கு இரட்சிப்பைக் கொடுக்க முடியும்.

இயேசு இந்த நான்கு வீட்டை விட்டுப் போகும்போது, அவர்கள் முன்னிலையைக் காட்டிலும் முன்னேற்றம் காணப்பட்டது. சுகம், ஜீவன், வார்த்தை, இரட்சிப்பு நான்கும் கிடைத்தது. நான்கு வீடுகள், நான்கு சந்திப்புகள், நான்கு ஆசீர்வாதங்கள்.

இன்றைக்கும் நாம் இயேசுவை நம் வீட்டிற்கு அழைத்து அவர் கூறிய வார்த்தைகளின்படி செய்வோமானால், அவரும், அவருடைய வார்த்தைகளும் நம்மை உயர்த்தும். வார்த்தைகள் என்று சொல்லும்போது கடைசி நாளில் நம்மை நியாயந்தீர்க்கப் போகிறதான வசனம் என்னும் வார்த்தைகளைக் கேட்டு, விசு வாசித்து, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பாவம் போக ஞானஸ்நானத்தின் மூலம் கழுவப் படுவோமானால் நாம் இரட்சிக்கப்பட்டு இயேசு நம்மை அவருடைய சபையில் சேர்ப்பார். ஒரு வேளை நாம் அவருடைய சபையில் அங்கமாக இருப்போமானால் என்னென்ன காரியங்கள் செயப்பட வேண்டும் என்று வசனம் சொல்லுகிறதோ அதைச் செய்வோம். அப்போதுதான் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உண்மையாகவே, நம் குடும்பம் இரட்சிக்கப்பட வேண்டும். மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். கணவனுடைய குணத்தினாலும், மனைவியினுடைய பரிசுத்தத்தினாலும் நன்மையான காரியங்கள் குடும்பத்தில் கிடைக்க வேண்டும். இவை எப்படி கிடைக்கு மென்றால் நம் குடும்பத்தில் இயேசு இருக்க வேண்டும். நாம் ஆயத்தமா? ஆமென். ✝

வாலிபர் பகுதி

# கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்யாமல்

**Dr. ஏபில் நாயகம்**

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். ரோமர் 15:14 ல் நாம் வாசிக்கிறபடி முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. அதன் அடிப்படையில் இந்த மாதம் யூதாவை ஆண்ட ஆகாஸ் ராஜாவின் வாழ்க்கையிலிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

ஒரு கன்னிகையின் வழியாக இம்மானுவேல் பிறப்பார் என்ற நற்செய்தி, கிறிஸ்துவின் பிறப்பிற்கு சுமார் 750 ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்ட ஒரு தீர்க்கதரிசனம். இது உலகனைத்துக்கும் நற்ச்செய்தியாக இருந்தாலும், யாரிடம் சொல்லப்பட்டதோ, அந்த நபருக்கு இது நற்ச்செய்தியாகவும் அமையவில்லை, நம்பிக்கை தரும் அடையாளமாகவும் தோன்றவில்லை. இது ஏன் என்ற கேள்வி நிச்சயம் வரும். தொடர்ந்து படியுங்கள்.

ஏசாயா தீர்கனின் புஸ்தகம் 7ஆம் அதிகாரத்தை நாம் வாசிக்கும் போது, யூதாவின் ராஜாவாகிய ஆகாசிடம், ஏசாயா தேவனால் அனுப்பப்படுவதை வாசிக்க முடியும் ( வசனம்3 ).

இந்த அதிகாரத்தின் பின்னணியை நாம் கவனிக்க வேண்டும். இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிந்து, வடக்கு ராஜ்யமாக இஸ்ரவேலும், தெற்கு ராஜ்யமாக யூதாவும் இருந்ததை நாம் அறிவோம். ஏசாயா 7:1 நாம் வாசிக்கும் போது, வடக்கு ராஜ்ஜியமாக இஸ்ரவேலின் ரராஜாவாகிய பெக்கா என்பவனும் அதன் அண்டை நாடான சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீன் என்பவனும் சேர்ந்து, தெற்கு ராஜ்யமாகிய யூதாவின் ராஜாவான ஆகாசுக்கு எதிராக போருக்கு ஆயத்தமானார்கள்.

இதை அறிந்த தாவீதின் குடும்பமாகிய யூதா தேசத்து மக்களுக்கும், அதன் ராஜாவாகிய ஆகாசுக்கும் கலக்கமும், பயமும் ஏற்பட்டது. வசனம் 2 ல் அவர்கள் இருதயம் அசைந்தது என்று வாசிக்க முடியும். தங்களுக்கு நேரிடப்போகிற அழிவை நினைத்து மிகவும் பயந்திருந்தார்கள்.

இதைப் புரிந்து கொண்ட தேவன் ஏசாயாவையும், அவரின் மகனையும் அனுப்பி, யூதாவின் ராஜாவாகிய ஆகாசிடம் பயப்படாமல் இரு என்றும், உன் இருதயம் துவள வேண்டாம் என்றும், யூதா மீது போர் செய்ய திட்டமிடும் ரேத்சீன் இராஜா மற்றும் பெக்கா இராஜாவின் ஆலோசனை நிலைநிற்பதில்லை என்றும் அவர்களின் திட்டப்படி சம்பவிப்பதுமில்லை என்றும் செய்தி அனுப்பினார்.

ஆனால், ஆகாஸ் என்ன செய்தான்? தேவ ஆலோசனையை கேட்காமல், தேவன் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையையும் விசுவாசமும் இல்லாமல் தன் மனதில் தோன்றினபடி முடிவெடுத்தான். ஆம், தேவனை சாராமல். வேறொரு இராஜாவை சார்ந்து அந்த ராஜாவை தனக்குத் துணையாக்கினான்.

II இராஜாக்கள் 16:7ல் ஆகாஸ் அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசரிடத்திற்கு திரும்பி, அவனுக்கும் அவன் தேவர்களுக்குப் பிரியமாக நடந்தான். தன்னை எதிர்க்கும் சீரியாவின் ராஜாவையும் இஸ்ரவேலின் ராஜாவையும் முறியடிக்க, தேவனுடைய ஆலோசனையின் மேல் நம்பிக்கையில்லாமல் தன் விருப்பப்படி அசீரியாவின் ராஜாவைத் தனக்குக் கூட்டாக்கினான்.

தேவன் ஏசாயா மூலாய் ஆகாசிடம் நம்பிக்கையான வார்த்தைகளை மட்டும் அல்ல, நம்பிக்கையின் உறுதியாக ஒரு அடையாளத்தையும் கேட்கச் சொன்னார். ஆனால், அசீரியாவின் ராஜாவை நம்பின ஆகாசு என்ன சொல்கிறான் பாருங்கள்! ஏசா 7:12 ஆகாசோ, நான் கேட்கமாட்டேன். நான் கர்த்தரைப் பரிட்சை செய்யமாட்டேன் என்றான்? இந்த பதில் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. ஆனால் உண்மையில், இவை வெறும் வாயின் வார்த்தைகளே, இருதயத்திலோ அசீரியா இராஜாவுக்குத் தன்னை அர்ப்பணித்து விட்டான். அந்த ராஜாவை தனக்குத் துணையாகக் கூட்டாக்கிக் கொண்டான். தேவனையும் அவருடைய சொல்லையும் அவன் அசட்டை செய்தான். ஆகாஸ் தேவனுடைய பார்வையில் செம்மையானதைச் செய்யவில்லை. தன்னுடைய தவறான முடிவுகளாலே யூதா முழுவதும் அசீரியாவிற்கு அடிமையாய் போனது.

II நாளாகமம் 28:27 ல், ஆகாஸ் மரணமடைந்தான். ஆனால், அவனை இஸ்ரவேல் ராஜாவின் கல்லறையில் வைக்கவில்லை என்று பார்க்கிறோம்.

பிரியமானவர்களே! மிக முக்கியமான பாடங்களை ஆகாசின் வாழ்க்கை நமக்குக் கற்றுத் தருகிறது.

I தேவனை நம்ப வேண்டும்

ஏசாயா மூலம் தனக்குச் சொல்லப்பட்ட காரியங்களை அவன் அசட்டை செய்தான். யூதாவுக்கு அழிவு வராது என்று தேவன் சொன்னார். பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்று சொன்னார். ஆனால், நடக்காத ஒரு போருக்கு தனக்கு ஒரு கூட்டாளியை இந்த ஆகாஸ் சேர்த்துக் கொண்டான். அது மட்டுமல்ல. அந்த அசீரிய ராஜாவுக்கு காணிக்கையாக கர்த்தருடைய ஆலயத்தில் இருந்த வெள்ளியையும் பொன்னையும் எடுத்திருக்கிறான். எவ்வளவு துணிகரம்?

ஆனால், இந்த துணிகரமான பாவிக்குத்தான் இம்மானுவேல் என்ற இரட்சகரின் பிறப்பு பற்றின தீர்க்கதரிசனம் சொல்லப் பட்டது. தீமையிலும் ஒரு நன்மை என்பதைப்போல. ஏசா. 7:14 ல், அந்த தீர்க்கதரிசனம் ஆகாசுக்கு ஒரு அடையாளமாகக் கொடுக்கப்பட்டது. அதை அவன் நம்பவில்லை.

பிரியமானவர்களே! தேவன் பொய்யுரையாதவர், நம் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான எல்லா ஆலோசனைகளும், ஆறுதலான வார்த்தைகளும், நம்பிக்கையூட்டும் வசனங்களும் நமக்குப் புதிய ஏற்பாட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. சூழ்நிலைகள் எவ்வளவு கடினமாக இருந்தாலும், அவரை நாம் நம்ப வேண்டும். ஆகாசுக்கு கொடுக்கப்பட்ட நம்பிக்கையின் அடையாளமான இயேசு பிறந்து, வாழ்ந்து நமக்காக மரித்து, உயிரோடே எழுந்து, இன்றும் நமக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். எனவே, தேவனையும், அவர் வார்த்தைகளையும் நாம் நம்ப வேண்டும்.

II மகிமையான நிலையை இழந்தான்

ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் என்று I கொரி 15:33 ல் வாசிக்கிறோம். ஆகாஸ் ராஜாவும் தன்னுடைய தவறான சேர்க்கையினாலே தேவனை விட்டு விலக நேரிட்டது. அது மட்டுமல்ல, அந்நிய தேவர்களை நாட அவன் துணிந்தான். தான் கெட்டது மல்லாமல், யூதாவின் குடிகளான

பலரையும் அந்நிய தேவர்களைப் பின்பற்ற காரணமாகி விட்டான். இதன் விளைவு அவன் ராஜாவாக மரித்தும் ராஜாக்களின் கல்லறையில் அவன் வைக்கப்படவில்லை. அந்த மகிமையை அவன் இழந்தான். இயேசுவின் பிறப்பு தீர்க்கதரிசனமாக கொடுக்கப்பட்ட மனிதனின் நிலையை கவனியுங்கள். பிரியமானவர்களே, நாமும் நம்முடைய விசுவாசக் காரியங்களில் கவனக்குறைவாக இருந்தால் மகிமையில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கும் ஜீவ கிரீடத்தை நாம் இழக்க நேரிடும். நாமும் ஆகாசை போல் மகிமை இழந்தவர்களாக போய்விடுவோம்.

பிரியமானவர்களே! நாம் தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் நம்ப வேண்டும். கடினமான நேரங்களில் தேவனல்லாத, தேவனுக்குப் பிரியமில்லாத இடங்களிலோ, நபர்களிடத்திலோ நாம் உதவியையும் பாதுகாப்பையும், வழிநடத்துதலையும் தேடக்கூடாது. இந்த உண்மைகளை நாம் ஆகாஸ் ராஜாவிடம் கற்றுக்கொண்டோம். இதைக் கைக்கொண்டு ஜீவகிரீடத்தை பெற நாம் முயற்சி செய்வோம்.

தேவன் தாமே காப்பாராக! ✝

---

# உண்மை

| | | |
|---|---|---|
| 1. | ஆபிரகாம் இருதயத்திலே உண்மை | நெகேமியா 9:7,8 |
| 2. | மோசே எங்கும் உண்மை | எபிரெயர் 3:5 |
| 3. | தாவீது நீதி செய்வதிலே உண்மை | I சாமுவேல் 26:23] |
| 4. | எலியா வார்த்தையிலே உண்மை | I ராஜாக்கள் 17:24 |
| 5. | எசேக்கியா செயலிலே உண்மை | II நாளாகமம் 31:20 |
| 6. | தானியேல் வேலையிலே உண்மை | தானியேல் 6:4 |

சிறுவர் பகுதி

# தென்தேசத்து ராஜ ஸ்திரீ

Dr. *பிரெய்ஸி*

ஹாய் குட்டீஸ்! எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்? நீங்கள் எல்லாரும் நன்றாக படிக்கிறீர்களென்றும், நன்றாக பரீட்சை எழுதுகிறீர்களென்றும் நாங்கள் நம்புகிறோம். நீங்கள் நன்றாகப் படிப்பதனால் வளர்ந்து நற்கிரியைகளை தேவனுடைய ஜனங்களுக்குச் செய்ய முடியும். வேதாகமத்தை நீங்கள் வாசித்து அவருடைய சத்திய வார்த்தைகளை அறிந்து கொள்ளுங்கள். ஏனென்றால், உலகிலுள்ள மற்றெந்த பாடங்களைவிடவும் இதுதான் உங்களுக்கு முக்கிய பாடமாயிருக்கிறது. இந்த மாதம் சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க பூமியின் எல்லைகளிலிருந்து வந்த தென்தேசத்து ராஜஸ்திரியைக் குறித்து நாம் பார்க்கப் போகிறோம்.

1-13 வசனங்களில் சேபாவின் ராஜஸ்திரீயைக் குறித்து நாம் வாசிக்கிறோம். இவள் சாலொமோனுடைய ஞானத்தை சோதிக்கவும். சாலொமோனுக்கு தேவனிடமிருந்த உறவை அறியவும் தென் தேசத்திலிருந்து பயணித்தாள். அருமையான பிள்ளைகளே, நீங்களெல்லாரும் சத்தியத்தை அறியும் ஆசை உடையவர்களாய், அதை அறிந்து கொள்ள தேவனுடைய வார்த்தையைப் பார்க்க வேண்டும். விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். எனவே, சத்தியத்தை நீ அறிந்து கொள்ள வேதாகமத்தை தினமும் வாசிக்க வேண்டும். சாலொமோன் ராஜா அவள் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் விடையளித்து நம்முடைய தேவன் ஜீவனுள்ளவர் என்பதை நிரூபித்தார். நீங்களும் உங்கள் வார்த்தையினாலும், நடத்தையினாலும் நம் ஜீவனுள்ள தேவனை அறியச் செய்ய வேண்டும்.

இந்த ராஜஸ்திரீ வந்து சாலொமோனையும், அவருடைய ஜனங்களையும் கண்ட பிறகு தான் நம் ஜீவனுள்ள தேவனை விசுவாசித்தாள் (I ராஜாக்கள் 10:5,7,9, பிள்ளைகளே, நீங்கள் உங்கள் உடையினாலும், வார்த்தையினாலும், நடத்தையினாலும் நம் ஜீவனுள்ள தேவனை மற்றவர்களுக்கு காட்டுங்கள். உங்களைச் சுற்றிலும் இருளில் இருக்கும் மக்களிடத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தி அவர்கள்மீது ஒளிவீச பாடுபடுங்கள்.

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.**

## வினாக்கள் :

1. தென்தேசத்து ராஜ ஸ்திரீ எங்கேயிருந்து வந்தாள்?

2. அவள் எதைக் கொண்டுவந்தாள்?

3. அவள் சாலொமோனிடத்தில் வந்த போது எதைக் கண்டாள்?

4. அவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் யார் பதிலளித்தார்?

5. சாலொமோன் அந்த ராஜஸ்திரீக்கு என்ன கொடுத்தார்?

---

### தேவனுடைய மீட்பின் திட்டம்

#### தேவனுடைய பங்கு

★ அன்பு (யோவான் 3:16)

★ கிருபை (எபேசியர் 2: 8)

★ இரக்கம் (தீத்து 3:5)

★ சுவிசேஷம் (ரோமர் 1:16)

#### கிறிஸ்துவின் பங்கு

★ கிறிஸ்துவின் இரத்தம் (வெளிபடுத்தின விசேஷம் 1:5)

★ நம் மத்தியஸ்தர் (1 தீமோத்தேயு 2:5 )

#### பரிசுத்த ஆவியின் பங்கு

★ வெளிபடுத்தின விசேஷம் (II பேதுரு 1:20–21)

#### மனிதனுடைய பங்கு

★ வேதாகம விசுவாசம் (யோவான் 8:24)

★ மனந்திரும்புதல் (அப்போஸ்தலர் 17:30)

★ ஞானஸ்நானம் (I பேதுரு 3:21)

★ கீழ்ப்படிதல் (எபிரெயர் 5:8,9)

★ சுத்தம் (வெளிபடுத்தின விசேஷம் 22:14)

★ உண்மை (வெளிபடுத்தின விசேஷம் 2:10)

★ அன்பு (I யோவான் 2:10)

# நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?

Bro. **பென்னி மார்ட்டின்**

பிரியமான திருமறை ஆசான் வாசகர்களுக்கு வானவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைப்பில் காணும் வார்த்தைகள் அசிரீய ராஜாவாகிய எசேக்கியாவுக்கு உரைக்கப்பட்ட வார்த்தைகளாகும். யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா ஆரம்ப நாட்களில் தேவனுக்குப் பயந்து தேவன் மீது அபரிதமான நம்பிக்கை கொண்டிருந்த ஒரு ராஜாவாக இருந்தான். ஆனால், அசீரிய ராஜாவாகிய சனகெரிப் யூதாவுக்கு விரோதமாகப் படையெடுத்து வந்தபோது அவன் நம்பிக்கையில் நலிந்து போனபடியால் தேவனை அறியாத ஒரு மனிதனைக் கொண்டு இந்த வார்த்தைகள் இவனுக்கு உரைக்கப்பட்டன. [II ராஜாக்கள் 18:19-21]. ஒரு வசனத்திற்கு பிறகு அதாவது 21 ம் வசனத்தில் நீ அந்த எகிப்தை நம்புகிறாய் என்று சனகெரிப்பின் தளபதியால் சராமரியாக எசேக்கியா மீது குற்றச்சாட்டு வைக்கப் பட்டது. பொதுவாக நாம் பார்க்கும்போது இந்த எகிப்து தேசம் நாகரிகம் மற்றும் கலாச்சாரத்தின் தொட்டிலாக இருந்திருக்கிறது. வேதாக மத்தில் எகிப்துக்கென்று ஒரு தனி இடம் உண்டு. யோசேப்பின் சகோதரர்கள் பஞ்ச காலத்தில் ஆகாரத்திற்காக எகிப்தியக்குத்தான் சென்றார்கள். இஸ்ரவேலர்களை வனாந்திரத்தில் வழிநடத்தின தேவதாசனாகிய மோசே எகிப்திருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான் என்று [அப்போஸ்தலர் 7:22ல்] நாம் வாசிக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் எகிப்து தேசம் பாவத்தையும், அடிமைத் தனத்தையும் நினைவுபடுத்துகிறது. சரி, இது ஒரு புறம் இருக்கட்டும் மறுபுறம் நம்முடைய நம்பிக்கை அதாவது தேவன் மீதான நம்முடைய நம்பிக்கை எப்படி இருக்கிறது என்று அலசி ஆராய்வோம். நம் நம்பிக்கை இந்த எசேக்கியா ராஜாவைப் போய் நலிவடைந்த நம்பிக்கையாக இருக்கிறதா அல்லது நங்கூரம் பாய்ச்சப்பட்ட நம்பிக்கையாக இருக்கிறதா?

## I. ஒருவரை தேவன்மீது நம்பிக்கை இழக்கச் செய்கிற காரணிகள்

பொதுவாகவே, தேவன்மீது நம்பிக்கை வைத்து வாழ்பவர்கள் காரியங்கள் சுமூகமாக, சுபமாக போய்க்கொண்டிருக்கும்போது தேவனோடு கொண்டிருக்கும் உறவில் எந்த விரிசலையும் ஏற்படுத்திக் கொள்வதில்லை. ஆனால், காரியங்கள் நாம் எதிர்பார்த்த படி நடக்காதபோது, எதிராக எழும்போது, புரியாத புதிராகத் தோன்றும் போது நம்பிக்கையை இழந்து போகிறோம், விழுந்து போகிறோம். அந்த சந்தர்ப்பத்தில் தேவன் மீது நாம்

கொண்டிருக்கும் நம்பிக்கையில் சற்று சறுக்கல் ஏற்படுகிறது. வேதாகமத்தில் பார்க்கும்போது, பக்தனாகிய யோபுவின் சரித்திரத்தை புரட்டிப்பார்த்தால் அவர் தன் வாழ்வில் மிகப்பெரிய பொருளாதார சேதத்தை சந்தித்ததை நாம் காண முடியும். சில நிமிடங்களில் யோபுவிடமிருந்த எல்லாமே பறிக்கப்பட்டன. அவர் எல்லா வற்றையும் இழந்துவிட்ட நிலையிலும் நம்பிக்கையை மட்டும் இழக்கவில்லை. பலர் தங்கள் வாழ்வில் பொருளாதாரப் பிரச்சனைகள் ஏற்படும்போது தேவன் மீதான நம்பிக்கையை இழந்துவிடுகிறான். அதன் விளைவாக தங்களையே இழந்து விடுகிறார்கள். I தீமோத்தேயு 6:10 ல் நாம் பார்க்கும்போது பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

அடுத்ததாக நாம் பார்க்கும்போது, பலருடைய குடும்பங்களில் நேரிடும் சோகச் சம்பவங்கள் தேவன் மீதான ஒருவருடைய நம்பிக்கையை குன்றச் செய்துவிடுகின்றன. நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வேதாகம கதாப்பாத்திரமான யோபு தன்னுடைய சொத்க்களையும், பத்துப் பிள்ளைகளையும் சில நிடங்களில் இழந்தார். அவர் அத்தனை இழப்புகளின் மத்தியிலும் கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் கொடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றார். பலர் இத்தகைய சூழ்நிலையை எதிர் கொண்டால் அநியாயம் செய்பவர்களெல்லாம் ஐசுவரியமாக வாழ் கிறார்ளே நான் அப்படி என்ன பெரிய பாவம் செய்துவிட்டேன்? தேவன் ஏன் இதை எனக்கு அனுமதித்தார்? என்று புலம்ப ஆரம்பித்துவிடுவார்கள் ஆனால், இங்கே யோபுவின் நம்பிக்கையின் வார்த்தைகளை வாழ்வின் எல்லா நிலைகளிலும் நினைவில் கொள்ளுங்கள் (யோபு 13:15).

### II ***தேவனை நம்புகிறவர்கள் அவர் தங்கள் தேவைகளை சந்திப்பார் என்று நம்புகிறார்கள் (பிலிப்பியர் 4:19)***

பிரியமானவனவர்களே, நம் வாழ்க்கையில் உண்டாகும் எல்லா நன்மைகளும் தேவனிடமிருந்துதான் இறங்கி வருகிறது, சுரந்து வருகிறது. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்கோபு 1:17). பல சந்தர்ப்பங்களில் நாம்

இதை சிந்திப்பதில்லை. பலர் தங்களுடைய கல்வி, அறிவு போன்றவைகளால் நன்மையான காரியங்களை வாழ்க்கையில் பெற்றிருப்பதாகப் பெருமிதம் கொள்கிறார்கள். முகமும், முகவரியும் இல்லாத நம்மை இகபர நன்மைகளால் நிறைத்தது தேவன் என்பதை பல நேரங்களில் மறந்து விடுகிறோம் அல்லது நினைக்க மறுத்து விடுகிறோம். பிதாவாகிய தேவன் நம் அடிப்படைத் தேவைகளான உணவு உடை போன்றவைகளை முதலாவது

அவருடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடும்போது கொடுக்கிறார். (மத்தேயு 6:33). இதன் பொருள் நாம் வேலை செய்யாமல் விருதாவாக சுற்ற வேண்டும் என்பதல்ல மாறாக வேலை வாய்ப்புகளும் அதினால் வரும் நன்மைகளும் தேவன் நம்மை பராமரிப்பதின் ஓர் அங்கமாக இருக்கிறது. சிலர் தங்கள் தேவைகள் அதிகமாக இருப்பதாகவும், அதை தேவனால் சந்திக்க முடியாது. என்றும் நினைத்து தேவனுடைய வல்லமைக்கு எல்லை குறிக்கிறார்கள். பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது எனும் வார்த்தைகள் நம்மை பூரிக்கச் செய்ய வேண்டும்.

பல வேளைகளில் நம் வாழ்க்கையில் ஏற்படும் மலை போன்ற பிரச்சனைகளை எண்ணி மலைத்துப்போய், நிலை குலைந்து போகிறோம். தேவன் நம்முடைய சரீரப்பிரகாரமான தேவைகளை மாத்திரமல்ல ஆவிக்குரிய தேவைகளையும் சந்திக்கிறார். இவை களோடு நம் தேவன் நின்றுவிடாமல் நமக்கு உணர்வுப்பூர்வமான பாதுகாப்பையும் அளிக்கிறார். அதென்ன உணர்வுப்பூர்வமான பாதுகாப்பு என்று நீங்கள் கேட்கலாம். இவ்வுலகில் எத்தனையோ பேர் தங்கள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை, தங்களிடம் யாரும் அன்பு காட்டுவதில்லை என்று ஏங்குகின்றனர். அவர்கள் தேவனுடைய அன்பை ருசிபார்க்கும்போது தேவனை உறுதியாக பற்றிக்கொள்கின்றனர். அவர்கள் தேவனுடைய உண்மையான அன்புக்கும் இவ்வுலகின் போலியான அன்புக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை கண்டறிந்து இவ்வுலகின் மாயையான அன்பு வேண்டாம், தேவனுடைய உயரிய உன்னதமான தன்னலமற்ற அன்பே தங்களுக்குப் போதுமானது என்று திருப்தி அடைகின்றனர். நாசியில் சுவாசமுள்ள மனிதனை நம்பி ஏமாற்றமடைகிறோம். மாற்றத்திற்காக ஏங்குகிறோம். ஜீவனுள்ள தேவனை நாம் முழுமையாக நம்பி வாழ்க்கையில் எல்லாவற்றையும் செய்யும்போது நம் நம்பிக்கை ஒருபோதும் வீண்போகாது.

### III தேவனை நம்புகிறவர்கள் போதுமென்ற மனதுடனே இருப்பார்கள்

கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் எத்தனையோ தேவனு டைய ஆசீர்வாதங்களை ருசிபார்த்தபோதிலும் கூட, திருப்தி யில்லாமல் இன்னும் வேண்டும், இன்னும் வேண்டுமென்று தேவனிடம் தவறாமல் முறையிடுவதை நாம் காண்கிறோம். வேத வாக்கியங்களில் நாம் காணும்போது போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்று காண்கிறோம் (I தீமோத்தேயு 6:6). இதன்பொருள் நாம் வாழ்க்கையில் மேம்பட அதிகமாக உழைக்கக்கூடாது. அதிகமாக எதையும் செய்யக் கூடாது. அதே நிலையிலேயே இருக்க வேண்டும் என்பதல்ல. நாம் பேராசையுடையவர்களாக இல்லாமல், தேவன் நமக்கு தந்திருக்

கிறவைகளில் திருப்திபட வேண்டும் என்பாதாயிருக்கிறது. பிலிப்பியர் 4:11 ல் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்க கற்றுக்கொண்டேன் என்று பவுல் சொல்கிறார். எனவே, திருப்தி அடைவதென்பது மனிதனிடத்தில் இயற்கை யாகவே அமைந்த ஒரு தன்மையல்ல அது கற்றுக் கொள்கிற ஒன்றாகத்தான் இருக்கிறது.

நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள் என்று எபிரெயர் 13:5 ல் வாசிக்கிறோம். நாம் பணப்பசி நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனிதர்களுடைய தேவைகள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. இந்த நுகர்வு கலாச்சாரத்தில் முகர்ந்து பார்ப்பதையெல்லாம் வாங்கும் வாடிக்கையாளராகி விட்டோம். வீட்டில் விலையுயர்ந்த பொருட்கள் வைத்திருந்தால் அவன் புத்திசாலி எனும் போலி வலையில் சிக்கிக் கொண்டோம். இவ்வுலகில் நமக்கான தேவைகளுக்காக செலவு செய்வதற்கு குறைந்தளவு பணமே போதுமானது. ஆனால் அதில் நாம் திருப்திப்படாமல் மற்றவர்களுக்காக வாழ ஆசைப்பட்டு வீணான காரியங்களில் சிக்கிக் கொள்கிறோம்.

பிரியமானவர்களே! இவ்வுலகில் எல்லோருக்கும் பிரியமாய் வாழ்வதென்பது கூடாத காரியம். தேவனுக்குப் பிரியமாக வாழ்வதை நம் தலையாயக் கடமையாகக் கொண்டிருந்தால் அவர் நமக்குத் தந்திருப்பவைகளில் திருப்தி அடைவோம். அதற்காக தேவனிடத்தில் நன்றியுள்ளவர்களாயிருப்போம். நம் தேவன் நம்மை பராமரிப்பார் என்ற நம்பிக்கையுடையவர்களாயிருந்தால் போதுமென்கிற மனதுடனே இருப்போம். அப்படியிருக்க தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

---

## விக்கிரகங்களும் தேவனும்

- விக்கிரகங்கள் மனிதனால் உண்டாக்கப்படுகின்றன. ஆனால் தேவன் மனிதர் களை உண்டாக்குகிறார்.
- விக்கிரகங்கள் மனிதர்கள் தூக்கிச் செல்ல வேண்டியதாயிருக்கிறது. ஆனால் தேவன் சர்வ வியாபியாயிருக்கிறார்.
- விக்கிரகங்கள் பொன்னினாலும், வெள்ளியினாலும் அலங்கரிக்கப் படுகின்றன. ஆனால் பொன் வெள்ளியை உருவாக்கினவரே தேவன் தான்

# என்னிடத்தில் உள்ளதை உனக்குத்தருகிறேன்

சகோ. K.M. பிலிப் – பவானி

**கி**றிஸ்துவுக்குள் அன்பான தேவ மக்கள் யாவருக்கம் நல்கிட்பர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். சபை உருவான கி.பி முதலாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட முதலாம் அற்புதத்திலிருந்து (அபட. 3:1–16). ஆவிக்குரிய ஆலோசனைகளைப் பெற அதன்படி செய்ய தேவன் தாமே நமக்கு பெலன் தருவாராக. பொதுவாகவே கொடுப்பதில் நம்மிடத்தில் எப்பொழுதும் போதுமான அளவு இருப்பதில்லை. இருப்பவர்களுக்கோ கொடுக்க மனம் இருப்பதில்லை. ஆனால் தேவ மக்களாகிய நமக்கு பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையதாயிருப்பதாலும், அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை என்பதாலும் (சங் 24:1,34:9). நம்மிடத்தில் கொடுக்க ஒன்றமில்லை இல்லை என்பது ஒருபோதும் இல்லை என்பதே உண்மை. ஆகவே, நாம் என்னிடத்தில் உள்ளதை தருவேன் என்ற நல்ல தீர்மானத்தோடு இக்கட்டுரையை உற்று கவனிப்போம்.

இச்சரித்திரத்தில் (அப் 3:1 16) தேவாலயத்தின் வாசலாண்டையில் பிறவிச் சப்பாணி ஒருவனின் பிச்சை கேட்கும் குரல், தேவாலயத்திற்குள் பிரவேசிக்கப் போகிற பேதுருவையும் யோவானையும் தடுத்து நிறுத்தியது. நீங்கள் தேவாலயத்திற்குள் போவதற்கு முன் நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்பதை நிரூபிக்க கிடைக்கும் இந்த வாய்ப்பை செய்து முடி என்பதே காாரணமாகும். இயேசு கூறின நல்ல சமாரியன் உவமையில் (லூா: 10:30 –37) ஆசாரியனும், லேவியனும் வழியில் குற்றுயிராய் ஆதரவற்ற நிலையில் கிடந்த ஒரு மனிதனுக்கு மனமிரங்கி தன்னால் இயன்ற உதவி செய்ய ஒரு வாய்ப்பு இருந்தும் அதைச் செய்யாமல் தேவாலயப் பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து விலகிச் சென்றார்கள். ஆனால், அவ்வழியே வந்த சமாரியனோ குற்றுயிராய்க்கிடந்த மனிதனைக் கண்டு, மனமிறங்கி தன்னால் இயன்ற அனைத்தும் உதவிகளையும், தேவைகளை அறிந்த விருப்பத்தோடு செய்தான். இந்த சமாரியனின் நற்செயலே, உலகம் உள்ளளவும், ஒவ்வொரு தேவ பிள்ளையும், அந்தப்படியே செய்ய வேண்டும் என்ற ஒரு மாபெரும் முன் உதாரணத்தை பெற்றிருக்கிறார்கள் என்பதை வேதத்தில் காண்கிறோம். ஆம், தேவனடைள ராச்சியமாகிய சபை வெறும் பேச்சில் அல்ல; செயலில் (பெலத்திலே) வெளிப்பட வேண்டும் ( I கொ 4;20).

இதைத்தான் மக்கதோனியா நாட்டு ஆதித்திருச்சபைகள் செய்து காட்டினர் ( II கொரி. 8:1-5). அவர்களிடத்தில் மிகுந்த உபத்திரவம் இருந்தது. கொடிய தரித்திரம் இருந்தது. கொடுக்க போதுமானதில்லாதிருந்தது. ஆனால், அவர்களிடம், தேவன் அளித்த கிருபை இருந்தது; பரிபூரண சந்தோஷம் இருந்தது. கொடுக்க வேண்டும் என்ற மனமும் இருந்தது. இவர்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மற்ற சபையாருக்கு, உதாரத்துவமாய், திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள். என்னிடத்தில் உள்ளதைக் கொடுக்கிறேன். என்று கொடுத்த அந்த சபையாரை தேவன் குறை வின்றி கொடுத்து ஆசீர்வதித்தால் பல எதிர்ப்புகளின் மத்தியிலும் அந்த சபை வளர்ந்து பெருகினது என்று பார்க்கிறோம்.

இங்கு பேதுருவும், யோவானும் ஒரு ஈனக்குரல் கேட்டு நின்றார்கள். ஆனால், இவர்களிடத்தில் சப்பாணிக்குக் கொடுக்க பணம் இல்லை. ஆனாலும் எங்களிடத்தில் உள்ளதைக் கொடுக்க முடியும் என்ற மனம் இருந்தது. அதற்குள் இரக்கம் மன உருக்கம், அன்பு, அக்கறை, பாசம், நேசம் இருந்தது. அந்த மனிதனின் ஈனக்குரலைக் கேட்காது இருந்தது. அவனிடம் நடந்து செல்ல கால்கள் இருந்தன. அவனை உற்றுப்பார்க்கக் கண்கள் இருந்தன. இந்த அன்பு கலந்த அணுகுமுறை நம்பிக்கையற்ற அவனுக்கு நம்பிக்கை ஊட்டியது. பாதிக்கப்பட்டவர்களுக்கு பாசத்தைக் காட்டுங்கள், பரிவுடன் நடந்து கொள்ளுங்கள். இரக்கம் பெறுவார்கள் (மத் 5:7). இயேசுவின் உவமையில் (லூக்கா 16:1931). ஐசுவரியவானுக்கு எல்லாம் போதுமானது இருந்தது. ஆனால், அவனிடம் அன்பு இல்லை. தன் கண்களில் கண்டு கொண்டிருந்த ஏழை லாசருவுக்கு கருணை காட்டவில்லை. இரக்கம் காட்டவில்லை. முடிவில் அவனுக்கு பரலோகம் இல்லாமல் போனது. ஏனென்றால், இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும். நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும் ( யாக் 2:13).

பிரியமானவர்களே! உலக மக்கள் ஒருவேளை என்னிடத்தில் கொடுக்க ஒன்றுமில்லை என்று நினைக்கலாம். ஆனால் தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு தேவன் ஒன்பது வகையான அழியாத பொக்கிஷங்களை கொடுத்திருக்கிறார். ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை , தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா 5;22,23) என்பவைகளை இவைகள் கொடுக்கக் கொடுக்க பெருகுமே தவிர, குறையாது. உங்களைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு வாரி வாங்குங்கள். அவர்கள் திருப்தி அடைவார்கள். மாற்க 6:33-44 ல் இயேசுவின் போதனையைக் கேட்ட ஒரு சிறுவன், என்னிடத்தில் உள்ளதைத் தருகிறேன் என்று சொல்லி தன்னிடம் இருந்த 5 அப்பம்

2 மீன்களை கொடுத்தான். இந்த 5அப்பம், 2 மீன்களை கொடுத்தான். இந்த5 அப்பம் 2 மீன்கள், சிறுவன் உட்பட 5000 பேருக்கு அதிகமானவர்கள் சாப்பிட்டுத் திருப்தி அடைந்தார்கள். அன்பானவர்களே! நம்மிடத்தில் இருப்பதை மனப்பூர்வமாய் கொடுத்து உதவுவது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் என்பதை எண்ணிப் பாருங்கள்.

கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் அமுக்கி குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள் [லூக் 6:38]. கொடுப்பதில் பெற்றுக் கொள்ளுபவர்களும் சந்தோசப்படுவார்கள், கொடுப்பவர்களும் சந்தோசப்படுவார்கள்.

இங்கு பேதுரு மற்றவர்களுக்குக் கொடுக்கும்படியாய் தன்னிடத்தில் இருப்பதை உணர்ந்திருந்தார். அந்த சப்பாணியின் வேண்டுதலை கேட்க காதுகள் இருக்கிறது அவனை உற்றுப்பார்க்க கண்கள் இருக்கின்றன; நீ எழுந்து நட என்று சொல்ல வாய் இருக்கின்றன. அவனருகில் சென்று வலது கையினால் அவனைப்பிடித்து தூக்கிவிட, கால்களும் இருக்கிறது. இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக இவைகளை செய்யும் பெலன் தர இயேசுக் கிறிஸ்துவின் நாமம் என்னிடத்தில் இருக்கிறது என்பதை சரியாய் பேதுரு உணர்ந்து வைத்திருந்தார். அன்பான தேவ பிள்ளைகளே, அன்பின் தேவன் நீங்கள் மற்றவர்களுக்கு கொடுக்கும் படியாய், அதன் மூலம் தேவ நாமம் மகிமைப்படும்படியாய், உதவும் படியாய், அதன் மூலம் தேவ நாமம் மகிமைப்படும்படியாய், அவர் உங்களுக்குக் கொடுத்திருக்கிற ஈவுகளை உணர்ந்து உதவி செய்யுங்கள். தேவன் மகிமைப்படுவார். இங்கு சுகம் பெற்ற சப்பாணி, எழுந்து நின்று நடந்து, குதித்து தேவனைத் துதித்துக் கொண்டு அவர்கள் உடனே கூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். அப் 3:8]. அன்பான தேவ ஜனமே உங்களால் இந்த தேவ வசனத்தின் உண்மைத் தன்மையைத் புரிந்து கொள்ள முடிகிறதா? பேதுருவும் யோவானும் என்னிடத்தில் உள்ளதை நான் நான் உனக்குத் தருகிறேன் என்று சொன்னதிநிமித்தம், தேவாலயத்திற்கு வெளியே வேதனையோடு வாழ்ந்து கொண்டிருந்த அந்த சப்பாணி தேவனைத் துதித்துக் கொண்டு அவர்களுடனே கூட தேவாலயத்திற்குள் பிரவேசித்திருக்கிறான் எனறால், இன்று நாம் கொடுத்த தேவ ஈவால் இரக்கத்தால், அன்பால், கருணையால், தேவ சத்தியத்தால், பாவத்திலிருந்து விடுதலை பெற்று, பழைய நிலையிலிருந்து எழுந்து புதிய ஜீவன் பெற்று நம்மோடு சபைக்குள் பிரவேசித்திருப்பவர்கள் எத்தனைபேர்? இதைத்தான் ஆதித்திருச் சபையார் செய்தார்கள். சிதறிப்போனார்கள் எங்குக் திரிந்து சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் [அப் 2:4].

அப்பொழுது யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமதானம் பெற்று பக்தி விருத்தியடைந்து. பெருகின.

இன்றும் இந்தியாவில் சபைகள் ஆங்காங்கே வளர்ச்சி யடைந்திருக்கிறது என்றால் காரணம் அன்றும், இன்றும் சுவிசேஷ ஊழியத்திற்கென்றும், உதவிகள் தேவைப்படுகிறவர்களுக்கென்று, என்னிடத்தில் உள்ளதை உற்சாகமாய்த் தருக்கிறேன் என்று உதாரத்துவமாய் கொடுத்துக் கொண்டிருக்கும் தேவ பிள்ளைகளே காரணமாகும் அன்பானவர்களே! நமக்கு யாரோ கொடுத்தார். நாம் கொடுக்க வேண்டாமா? ஒருவனுக்கு மனவிருப்பம் இருந்தால் அவனுக்கு இல்லாததின் படியல்ல. அவனுக்கு உள்ளதின் படியே அங்கீகிக்கப்படும். ஆகவே உங்களுக்கு உள்ளவைகளில் (அன்பு இரக்கம், மனஉருக்கம் தயவு, உதவும் மனப்பான்மை) எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக ( கொ 3:12,11). என்னிடத்தில் உள்ளதை தருவேன் என்ற தீர்மானத்தோடு வாழ்வோம். உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். ஆமென். ✝

## நாளும் நடப்பும்

1. உதரைன் –ரஷ்ய போரில் ஆயிரக்கணக்கானோர் பலியானது மட்டுமல்லாமல் லட்சக்கணக்கானோர் அகதிகளாகி விட்டனர்

2. புத்தகம் வாங்குபவர்களையும், புத்தகம் விற்பவர்களையும் இணைக்க மாநிலத்தில் மிகப்பெரிய புத்தகப்பூங்கா அமைக்கப்படும் – தமிழக அரசு.

3. இந்தியாவில் பணவீக்கம் புதிய உச்சத்தைக் தொட்டிருப்பதால் சாதாரண மக்களின் இயல்பு வாழ்க்கை அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

4. தமிழகத்தில் நடைபெறுகிறது உலக செஸ் ஒலிம்பியாட் 2022 அதிகாரப்பூர்வ அறிவிப்பு

5. இந்தியா முழுவதும் 12–14 வயதினருக்கு தடுப்பூசி போடும் பணி தொடக்கம்

# மனந்திரும்புங்கள் அல்லது கெட்டுப்போங்கள்

**சு**விசேஷப் பிரசங்கியார்கள் இந்த வார்த்தைகளை எண்ணற்ற முறை மனந்திரும்புதலின் அவசியத்தை வலியுறுத்துவதற்காக தங்கள் பிரசங்கங்களில் பயன்படுத்தியிருக்கிறார்கள். பாவத்திலிருந்து திரும்புதல் அல்லது மனந்திரும்புதல் மனமாற்றத்தில் இன்றியமையாத ஒன்று என்பது எவ்வித கேள்விக்கும் இடமில்லாமல் உண்மையாயிருக்கிறது [அப்போஸ்தலர் 17:30,31]. மேலும், நாம் கைக்கொள்கிற நம்புகின்ற எல்லாவற்றிற்கும் தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தை நாம் வலியுறுத்துகிறோம் என்பதில் எந்த சந்தேகமுமில்லை [1 தெசலோனிக்கேயர் 5:21]. எவ்வித ஆதாரமுமின்றி பிரசங்கங்களை செய்து வரும் இந்த நாட்களிலே தேவனுடைய புதிய உடன் படிக்கையின் அதிகாரத்தை, நாம் செய்கின்ற, போதிக்கின்ற எல்லாவற்றிலும் நிலைநிறுத்த வேண்டும் [II தீமோத்தேயு 4:8].

**லூக்கா 13:1- வசனங்களின் சூழ்நிலையை கவனியுங்கள்.**

பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்: அந்த வேளையிலேயே அங்கே இருந்தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவருக்கு அறிவித்தார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக: அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே மற்ற எல்லா கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களா? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்கிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள். சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதை; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்ற வாளிகளாயிருந்தார்கள் என்று நினைக்கிறீர்களோ? அப்படியல்ல வென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும்

மேற்சொல்லப்பட்ட வசனப் பகுதியின் பின்னனி சம்பவம் என்னவென்றுப் பார்த்தால் அங்கே இயேசு கிறிஸ்து திரளான ஜனங்களுக்கு போதித்துக் கொண்டிருந்தார் [லூக்கா 12:1–13:9]. இவ்வசனப்பகுதியில் மாயமாலத்தைப் பற்றிய அவருடைய போதனை [லூக்கா 12:1–12], பொருளாசை [13–34], விழித்திருத்தல் [35–48] வரவிருக்கின்ற சோகச் சம்பவங்கள் [49–59] மனந்திரும்புதல் [லூக்கா 13:1–9] போன்றவைகள் உள்ளடக்கம் 13:1ல் லூக்காவால் மேற்கோள் காட்டப்பட்டிருக்கும் சம்பவம் வேதாகமத்தில் எங்கும் பதிவு செய்யப்படவில்லை . யூதர்கள் மத்தியில் கலகம், அமளி போன்றவைகள் சர்வசாதாரணமாக காணப்பட்டிருக்கின்றன. பிலாத்துவின் கொடூர குணம் இங்கே ஆதாரப் பூர்வமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

யோபு புத்தகம் ஒருவர் பாவம் செய்வதனால் தான் பாடுகளை அனுபவிக்கிறார் எனும் எண்ணம் அவர்களுடைய ஆழ்மனதில் பதிந்திருக்கிறது. இத்தவறான எண்ணத்திற்கு எதிராக இயேசு ஏற்கனவே தம்முடைய சீஷர்களுக்கு போதித்திருக்கிறார் [யோவான் 9:3]. அதோடு கூட நம் கர்த்தர் சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டு பேர் கொல்லப்பட்ட சம்பவத்தையும் சேர்க்கிறார் [வசனம் 4]. இயேசு கிறிஸ்து இந்த சம்பவங்களைக் கொண்டு இஸ்ர வேல் ஜனங்களுக்கு மனந்திரும்புதலுக்கான பாடத்தை போதித் திருக்கிறார் [வசனம் 3,5] இந்த சம்பவங்கள் இஸ்ரவேலில் இயேசு கிறிஸ்துவின் மனந்திரும்புதலுக்கான அழைப்புக்கு வலு சேர்க்கிறது [மத்தேயு 4:17]. எருசலேமுக்கு எதிராக தேவ கோபாக்கினை அல்லது தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஆயத்தமாக இருந்த காலக்கட்டத்தில் நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்று அந்த ஜனங்களைப் பார்த்து மன்றாடியதில் புதுமை ஏதாவது இருக்கிறதா? அந்த சீலோவாம் சம்பவம் அதாவது அந்த வரலாற்றுப் பூர்வமான உண்மை ஜனங்கள் தங்கள் பாவங் களிலிருந்து மனந்திரும்பாமற்போனால் நரகத்தில் என்றென்றும் அழிந்து போவார்கள் என்னும் அடிப்படைத் தேவையை எடுத்துப் போடவே இல்லை என்பது உறுதி. ✞

## எல்லா கிறிஸ்தவர்களுமே கர்த்தருடைய ஊழியக்காரராயிருக்கிறார்கள்


சில கிறிஸ்தவர்களுக்கு தங்களை கர்த்தருடைய ஊழியக் காரர்கள் என்றெண்ணுவதில் கஷ்டம் இருப்பது போல் தெரிகிறது. எல்லா கிறிஸ்தவர்களுமே தேவனுக்கு சேவை செய்கிற படியால் அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள். நாம் சபையிலிருந்து உதவி பெற்றுக் கொண்டு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஊழியர்களுக்கும், உதவி பெறாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கம் சகோதரர்களுக்கும் இடையே நாமாகவே ஒரு பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். பலர் ஆத்தும ஆதாயம் செய்யும் பணியைத் தட்டிக் கழிப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்று நான் நம்புகிறேன்.

எருசலேமிலிருந்த சபைக்கு துன்பம் உண்டான போது ஆதிதிருசபையால் ஆரம்பைக்கப்பட்ட ஒரு பணி தான் நபர் ஊழியம். இதை குறித்து நாம் அப்போஸ்தலர் 8:3–4 வசனங்களில் வாசிக்க முடியும். சவுல் வீடுகள்தோறும் நுழைந்து புருஷரையும் ஸ்திரீகளை யும் இழுத்துக் கொண்டு போய், காவலில் போடுவித்து சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான். சிதறிப்போனவர்கள் எங்குதிரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் ஆதிதிருச்சபை மிகவேகமாக வளர்ந்ததற்கு இதுவே காரணம்.

கடந்த முப்பது வருடங்களாக கிறிஸ்துவுக்காக ஆத்தும ஆதாயம் செய்கிற காரியத்தில் ஆதிதிருச்சபையைப் போல் ஆகிவிட்டோம். இதற்கு முந்தைய காலக்கட்டத்தில் பல வருடங்களாக சுவிசேஷக் கூட்டங்களில் மட்டும் சிலர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். ஆனால், இப்போது நாம் கீழ்ப்படிவதின் அவசரத்தை உணர்ந்து, ஆண்டு முழுவதும் ஊழியக்காரியங்களில் ஈடுபடுகிறோம். தேவனுக்கு ஸ்தோத்திரம்.

அப்போஸ்தலனாகிய பவுல் எருசலேம் புறப்படுவதற்கு முன்பாக எபேசு பட்டணத்து மூப்பர்களிடத்தில் பேசும் போது பிரயோஜன மாவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி [அப்போஸ்தலர் 20:20]. பவுல் நாம் பின்பற்றும் படி ஒரு சிறந்த மாதிரியை வைத்திருக்கிறார். நம்முடைய சமுதாயத்தில் சுவிசேஷத்தால் பலரை சந்திக்கவேண்டுமென்று நாம் விரும்பினால் வீடுகள்தோறும் போய் நாம் வெளிப்படையாக தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும். இழந்து போன ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு மிசச்சிறந்த வழி தனிநபர் ஊழியந்தான் ✝


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.














# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026




Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month

# எங்களது இதர வெளியீடுகள்



















சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.